சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 03.04.2025

DW1: சாந்தி த/பெ– காந்தி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் 2018ம் வருடம் நீதிமன்றத்தில் பணியில் சேர்ந்தேன். நான் விருதுநகர் நீதிமன்றத்தில் ஒரு வருடம் பணியாற்றி 2021 முதல் சாத்தூர் நீதிமன்றத்தில் பணிபுரிந்து வருகிறேன். கிருஷ்ணன் மூலமாக தான் எனக்கு தெரியும் என்று சொன்னால் வாதியை யார் என்று தெரியாது. எனக்கு 18 வயதில் ஒரு ஆண், 15 வயதில் ஒரு பெண் என இரண்டு குழந்தைகள் உள்ளனர். எனது மகளின் சடங்கிற்கு நீதிமன்ற ஊழியர்கள் மற்றும் நீதிபதிகள் வந்தனர் என்றால் சரிதான். அந்த சடங்கு 2021ம் வருடம் நடந்தது, அது ஆகஸ்டா, செப்டம்பரா என்று தெரியாது. அந்த விழாவிற்கு வாதி வந்து ரூபாய் 500 மொய் செய்தார் என்ற விபரம் மொய் நோட்டில் பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கான விவரங்களை நான் தான் வழக்கறிஞரிடம் சொன்னேன். நான் தாக்கல் செய்த வாக்காலத்து மற்றும் எதிர்வழக்குரையில் உள்ள எனது கையொப்பத்தில் வித்தியாசம் இருக்கிறது என்றால் எனக்கு அவ்வாறு தெரியவில்லை. வா.சா.1ல் உள்ள கையெழுத்து போன்று தான் எனது பணிபதிவேட்டில் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் வா.சா.1ல் உள்ள கையெழுத்துக்கும் எனக்கும் சம்மந்தமில்லை. பி.வா.ஆ.1 மற்றும் 2 என்ற அறிவிப்புக்கு பதில் அறிவிப்பு வந்தது. மேற்படி பதில் அறிவிப்பு வழக்கிற்கு விரோதம் என்பதால் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வக்காலத்தில் உள்ள எனது பெயர் யார் நிரப்பினார் என்ற விபரம் எனக்கு தெரியவில்லை.

வாதியிடம் எனது மகளின் சடங்கிற்காக 11.10.2021ம் வருடம் ரூபாய் 5 லட்சம் கடன் பெற்றேன் என்றால் சரியல்ல. மேற்படி கடன் தொகையை செலுத்தாதால் 08.09.2022ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அதன்படி கடன் செலுத்தவில்லை என்பதால் தான் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த புரோ நோட்டு தேதியில் நான் நீதிமன்றத்தில் பணியில் இருந்தேன். அது என்ன கிழமை என்று எனக்கு தெரியாது. பொதுவாக காலை 10 – 1.30 மணி மற்றும் 2.30 – 5.30 மணி வரை எனது பணிநேரம் என்றால் சரிதான். பொதுவாக சனி, ஞாயிறு எனக்கு விடுமுறை நாட்கள்தான், ஆனால் விடுமுறை நாட்களில் அழைத்தால் பணிக்கு செல்வோம். சிரஸ்தார், தலைமை எழுத்தர் ஆகியோர் சொல்லி விடுமுறை நாட்களில் பணிக்கு செல்வேனா என்றால், நீதிபதி அழைத்தார் என்றால் பணிக்கு செல்வோம். சாத்தூர் நீதிமன்ற சார்பு நீதிபதி குடியிருப்பும், நீதிமன்றமும் வெவ்வேறு இடத்தில் உள்ளது என்றால் நீதிமன்ற வளாகத்தில் உள்ளது. 2021ம் வருடத்தில் சாத்தூர் நீதிமன்ற சார்பு நீதிபதி குடியிருப்பும், நீதிமன்றமும் வெவ்வேறு இடத்தில் உள்ளது என்றால் சரியல்ல. 11.10.2021ம் தேதியில் நான் நீதிமன்ற பணியில் இருந்தேனா சம்பந்தப்பட்ட நீதிபதியை விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான். என் ஒருவரின் வருமானத்தை வைத்து என் குடும்பத்தை நடத்துவது சிரமம் என்பதால் வாதி போன்ற நபர்களிடம் கடன் வாங்கி திரும்ப செலுத்துவது வழக்கம் என்றால் வேறுநபர்களிடம் வாங்கியது இல்லை கிருஷ்ணனிடம் மட்டும் ஒருதடவை வாங்கி நான் அதை திரும்ப செலுத்திவிட்டேன். கிருஷ்ணன் என்பவருடன் நான் தற்போது பேச்சுவார்த்தையில் உள்ளேனா என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தில் பணியாற்றுவதால் கிருஷ்ணனின் மூலமாக வாதிக்கு அறிமுகமாகி கடன் பெற்றேன் என்றும், வாதியை மோசடி செய்யும் எண்ணத்தில் நானும், கிருஷ்ணனும் நயவஞ்சக கூட்டு

சேர்ந்துள்ளோம் என்றால் சரியல்ல. கிருஷ்ணனிடம் வாங்கிய கடனுக்கும், வாதிக்கும் சம்பந்தமில்லை என்றும், வாதியிடம் நான் பெற்ற கடனை மோசடி செய்யும் எண்ணத்தில் தவறாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி மோசடியாக அறிவிப்பு அனுப்பி உள்ளதாக வாதி மீது நீதிமன்றத்திலோ, காவல் நிலையத்திலோ புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.1ல் உள்ள கையெழுத்தை சரிபார்க்க நான் நீதிமன்றத்தில் ஏதாவது குறிப்பாணை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வாதி தாக்கல் செய்த புரோ நோட்டை பார்க்காமல் அதில் உள்ள கையெழுத்தை என்னுடையது இல்லை என்று நீதிமன்றத்தை ஏமாற்றும் எண்ணத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது நான் சிவசாசி சார்பு நீதிமன்றத்தில் இளநிலை கட்டளை பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். பொதுவாக சிவகாசி நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டளை சார்பு செய்வதற்காக மட்டுமே நீதிமன்றத்தை விட்டு வெளியில் செல்ல முடியும் என்றால் சரிதான். மற்றபடி சொந்தவேலைக்காக பணி நேரத்தில் வெளியில் செல்ல முடியாது என்றால் சரிதான். இன்று நான் விடுமுறை எடுத்துள்ளேனா என்றால் இல்லை, நாசரிடம் தகவல் சொல்லிவிட்டு வந்தேன். பொதுவாக நீதிமன்ற பணியாளர் என்பதால் எழுத்து பூர்வமாக விடுப்பு விண்ணப்பம் கொடுக்காமல் தகவல் மட்டுமே சொல்லிவிட்டு வருவது தவறு என்றால் சரிதான். நான் பணி நேரத்தில் நீதிமன்றத்தை விட்டு வெளியில் வருவேன் என்றும், அதுபோல் வந்து வாதியிடம் பணம் பெற்றேன் என்றால் சரியல்ல. வாதியிடம் நான் கடன் பெற்றுள்ளேன் என்பதால் தான் அந்த புரோ நோட்டை நான் பார்க்க முயற்சிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி நத்தத்துப்பட்டியில் 150 முதல் 200 ஆடுகள் வைத்து தொழில் செய்து வருகிறார் என்றால் தெரியாது. கிருஷ்ணன் மீது கந்துவட்டி வசூலித்து வருவதாக காவல் நிலையத்தில்

புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை, நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. நான் அவ்வாறு புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த புகார் மீது ஏதேனும் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் இல்லை. வாதியிடம் வாங்கிய கடனை வட்டியுடன் செலுத்த கடமை பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. புரோ நோட்டில் சாட்சி கையெழுத்து போட்ட முத்துப்பாண்டி, ஜெயக்குமார் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.